பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 21 புதன்கிழமை (03-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 68

## முன்னேற முயன்ற ராணுவத்துடன் சண்டை

# மாதகலில் 10 படையினர் பலி

# 5 சடலங்கள் புலிகளால் மீட்பு

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

மாதகலில் நேற்றுக் காலை முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட பத்துக்கும் அதிகமான படையினர் பலியாகினர். அவர்களில் ஐவரின் சடலங்களையும் மேலும் பல ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக்காலை 6.50 மணியளவில் மாதகல் கடற்கரை வழியாக வீதித்தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீதே இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான படையினருக்கு உதவ முன்னேற முயன்ற மற்றுமொரு இராணுவ அணி, விடுதலைப் புலிகளின் தீவிர ஷெல் தாக்குதலையடுத்து இழப்புகளுடன் பின்வாங்கியது.

(உ-எ-8-6-15-728-45)

## 6 வேங்கைகள் வீரமரணம்

மாதகலில் விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகர அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் போராளிகள் அறுவர் வீரமரணம் அடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

★ கப்டன் செழியன் அல்லது பாரத் (செபஸ்தியாம்பிள்ளை மனோகரன் — மன்னார்).

★ லெப்டினன்ட் நெடுமாறன் அல்லது சாந்தன் (வேலாயுதம் பிரேம்குமார் — சாரதா வீதி, திருகோணமலை).

★ லெப்டினன்ட் தேனமுதன் அல்லது காளிதாஸ் (மணிராசா லோகிதராஜா— தம்பிலுவில், அம்பாறை).

★ லெப்டினன்ட் இறைஞன் அல்லது சுலக்ஷன் (அன்ரனி கனேஸ் — ஆரையம்பதி, மட்டக்களப்பு)

★ இரண்டாம் லெப்டினன்ட் மதிச்செல்வன் அல்லது லெனின் (சண்முகலிங்கம் விமலேஸ்வரன் — பருத்தித்துறை வீதி, நல்லூர்).

★ இரண்டாம் லெப்டினன்ட் தங்கவேல் அல்லது ராமு (முருகேசு தனபாலசிங்கம் — சீனியர் ஒழுங்கை, கலட்டியம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம்). [உ-3]

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம்

யாழ்ப்பாணம், பெப். 3

மாதகலில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிகள் | — | 02 |
| ரி - 56 ரகத் துப்பாக்கிகள் | — | 06 |
| ரி - 81 ரகத் துப்பாக்கிகள் | — | 02 |
| ஏ. கே. எல். எம் ஜி. மகஸீன்கள் | -- | 02 |
| ரி - 56 ரக மகஸின்கள் | — | 21 |
| ரி - 81 ரக மகஸின்கள் | — | 06 |
| தொடர் ரவைகள் | — | 550 |
| நடுத்தர ரவைகள் | — | 1,759 |
| ஜே. ஆர் ரக கைக்குண்டுகள் | — | 09 |

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 3

மாதகலில் முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலை அடுத்து நேற்றுக் காலை 7 மணிக்குப் பின்னர், அப்பகுதியிலிருந்து குடியிருப்புப் பகுதியை நோக்கியும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் முப்பது நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலின் போது இருபதிற்கும் குறைவாத ஷெல்கள் சுழிபுரம் பறாளை வயல் பகுதி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன. இதனால் சுழிபுரம் வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை சுமார் இரு மணி நேரம் பதற்றம் நிலவியது. (உ-15-17-28)

## ஹெலி நோட்டம்

ஏழாலை, பெப். 3

தெல்லிப்பளை, ஏழாலை வடக்கு, குப்பிளான் பகுதிகளை நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை ஹெலிக்கொப்டர்கள் மாறி மாறி வட்டமிட்டு நோட்டமிட்ட வண்ணம் இருந்தன. (உ-45)

## கண்ணியில் சிக்கி படையினர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 3

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் காவலரண்களுக்கு இடையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில், சிக்கி, கடந்த 26 ஆம் திகதி இரு இராணுவத்தினர் காயமடைந்தனர். (உ-3)

## ராஜீவ் கொலை வழக்கு இன்று விசாரணை

சென்னை, பெப். 3

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை இன்று பூந்தமல்லி தனி சிறைச்சாலையில் ஆரம்பமாகுகின்றது.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டு இருபது மாதங்களின் பின்னர் இந்த வழக்கு விசாரணை ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படகு விபத்தில் உயிரிழந்த படையினர் 14 பேர்

யாழ்ப்பாணம், பெப் 3

கடந்த மாதம் 25 ஆம் திகதி மூதூரில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 14 என்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கிறது.

உயிரிழந்த படையினரில் 11 பேர் இராணுவத்தினர். மற்றைய மூவரும் பொலிஸார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வவுனியா - கொழும்பு ரயில் மீண்டும் தடம் புரண்டது!

### பயணிகளுக்குச் சேதம் இல்லை

வவுனியாவில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயில் காலை 9-15 மணியளவில் மொல்காவலை ரயில் நிலையத்துக்கு அருகில் தடம் புரண்டது.

அந்த ரயிலின் என்ஜினே தடம் புரண்டதாகவும் அதனால் ரயில் பெட்டிகளுக்குச் சேதமேற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் எவரும் காயமடையவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமையும் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி புறப்பட்ட ரயில் ஒன்று மாகோ அருகில் தடம் புரண்டதும், அந்த விபத்தில் 17 பேர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்தவையே. (ஓ-எ)

## இந்தியாவைக் கண்டித்து தென்மராட்சியில் பேரணி!

இந்திய அரசின் வல்லாதிக்கப் போக்கைக் கண்டித்து, தென்மராட்சி மக்கள் நேற்றுக் காலை சாவகச்சேரிச் சந்தியிலிருந்து மிசாலை வரை பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணியில் சென்றோர் இந்திய, தமிழக அரசுகளுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் பத்துக்கு மேற்பட்ட கொடும்பாவிகள் பல்வேறு இடங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டு பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-117)

### யாழ். அரச ஊழியர்களுக்கு

## ஜனவரி சம்பள அதிகரிப்பு இந்த மாதமே கொடுப்பனவு!

யாழ்ப்பாணம், பெப். 3

வரவு — செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட —அரச ஊழியர்களுக்கான — சம்பள உயர்வு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும்.

யாழ். மாவட்ட அரச திணைக்கள கணக்காளர் சங்கத்தின் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் செயலகப் பிரதம கணக்காளர் திரு எஸ். சிவபாலன் தலைமையில் நடந்தபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

ஜனவரி மாதம் தொடக்கம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என வரவு—செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இந்தச் சம்பள உயர்வை யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால் சம்பள உயர்வு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ் மாவட்ட மக்களின்

## பயண அனுமதி அட்டைகள் 15 நாட்கள் காலநீடிப்பு

ளாலி படகுச்சேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, காலாவதியான பயண அனுமதி அட்டைகளின் கால எல்லை நீடிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் இது பற்றிய அறிவிப்பை விடுத்துள்ளனர்.

ஜனவரி 20 ஆம் திகதி முதல் ளாலிப் படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. அத்தினத்திலிருந்து மீண்டும் சேவை ஆரம்பிக்கப்படும் தினம் வரையான காலத்தில் காலாவதியாகும் பயண அனுமதி அட்டைகளின் கால எல்லை, சேவை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து மேலும் 15 நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய தற்காலிக, அவசர, புதுப்பித்தல் பயண அனுமதி அட்டைகளை வைத்திருக்கும் யாழ். மாவட்டப் பயணிகள் மட்டும் இந்த 15 நாள் கால எல்லை நீடிப்பு அனுமதியைப் பயன்படுத்தி வடபகுதிக்கு வெளியே செல்ல முடியும்.

— இவ்வாறு மேலும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (உ)

# வவுனியாவிலும் பல படையினர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 3

வவுனியா மேற்குப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளின் போது, விடுதலைப் புலிகளின் எதிர் தாக்குதல்களினால் படையினர் பலர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் உதவியுடன் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளனர் என்றும்—

விடுதலைப் புலிகளின் எதிர்ப்பைப் படையினர் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-3)

## 'குமண' நாளை வரும்

யாழ்ப்பாணம், பெப். 3

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் குமண கப்பல் நாளை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

கொழும்பில் இருந்து கடந்த திங்கட்கிழமை காலை புறப்பட்டு இன்று காலை 'குமண' கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என முன்னர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்த குருகுல பாடசாலை ஆரம்பம்

எதிர் வரும 6-2-93 சனிக்கிழமை தைப்பூச தினத்தன்று காலை 9 மணிக்கு 33/1 கடைச்சாமி வீதியில் உள்ள குருகுல கட்டடத்தில் அர்ச்சகாசிரிய ஸ்நபனாசார்ய, சிவாச்சார்ய வகுப்புகள் ஆரம்பமாகி, சனி, ஞாயிறு நட்களிலும், தினசரியும் வேதம், ஆகமம், தமிழ் திருமுறை, சோதிடம் முதலியபாடங்கள் நான்கு ஆசிரியர்களினால் நடத்தப்பட உள்ளன.

குருகுல பழைய மாணவர்களும், புதிய மாணவர்களும் தமது பெற்றோர் பாதுகாவலருடன் வந்து சேர்ந்து கொள்ளுமாறு வேண்டுவதுடன் 24-01-93 அன்று நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நிர்வாக சபையின் சார்பா நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

நா. சர்வேஸ்வர குருக்கள்
குருகுல பொது செயலாளர்

(5802)



# சிவயோக சோதிட நிலையம்

16/1, சீனியர் ஒழுங்கை,
(கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில், அரசமரத்திற்கு அணித்தாக)
யாழ்ப்பாணம்.

★ விஞ்ஞானிகளால் சாதகங்களைக் கணிப்பதற்கெனப் பிரத்தியேகமாக அதிநுட்பமாகச் செப்பனிடப்பட்ட பஞ்சாங்கங்களின் துணையுடன் உள்நாட்டு வெளிநாட்டுச் சாதகங்கள் துல்லியமாகக் கணிக்கப்படும்.

★ சாதகங்கள் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டுப் பலாபலன்கள் விளக்கிக் கூறப்படும்.

★ திருமணப் பொருத்தங்கள் ஆராய்வாகக் கணிக்கப்படும்.

★ எண்சோதிட முறையில் மட்டுமல்லாது சாதக ரீதியிலும் நீங்கள் அணிய வேண்டிய அதிர்ஷ்டக் கற்கள் பற்றிய ஆலோசனை வழங்கப்படும்.

★ நீங்களாகவே ஆற்றக்கூடிய கிரகதோஷ நிவர்த்தி, வழிபாடு பற்றிய விளக்கங்களும் வழங்கப்படும்.

(24231)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

92 பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கான

## துரித மீட்டல்
## DAY CLASS 8-00 — 2-00

ஆரம்பம்: 04-02-1993

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| கணக்கியல் | — | திரு. எஸ். கே. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | திரு. இரகுநாதன் |
| அளவையியல் | — | திரு எ. பிரபாகரன் |
| தமிழ் | — | திரு குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு சிறிதரன் |

செவ்., வியா., சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் நடைபெறும்

(சி 4209)



# மரண அறிவித்தல்

## அருள்பிரகாசம் இரவிகரன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்வன் அருள்பிரகாசம் இரவிகரன் அவுஸ்திரேலியாவில் விபத்தில் அகால மரணமானார்.

இவர் இளைப்பாறிய யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் (S. H. S.) Dr. இராசரெத்தினம் அருள்பிரகாசம் – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், பிரபாகரன் (அமெரிக்கா), முரளீதரன், தயாபரன் (அமெரிக்கா), கிருப சக்தி, ஜெயேந்திரன், சண்முகராஜ் ஆகியோரின் சகோதரனும், Dr கலர்க்கலோசநாதனின் (றாகம ஆஸ்பத்திரி) மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(24288)

தகவல்:
Dr அருள்பிரகாசம்
(தந்தை)


# இன்று

தெல்லிப்பழை, பெப். 3

வலி-வடக்கு கடற்றொழிலாளர் ஒன்றியத்தின் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது.

கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவின் பிரமுகர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

[ஒ-68]

★ ★ ★

மன்னார் மறை மாவட்டத்தின் ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் அடிகளார் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் வைத்து வரவேற்கப்படுவார்.

இந்த ஆலயத்தில் பங்குத் தந்தையாக இருந்த போதே, இவர் மன்னார் மறை மாவட்டத்துக்கு ஆயராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ 162-17)

★ ★ ★

மெய்கண்டதேவர் ஆதீன நூல் படிப்பகத் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். கலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் நடைபெறும். கண்ணப்ப நாயனார் நினைவும் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்படும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம். பெப். 3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல்வி நிலையம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு கிளைத் தலைமையலுவலகத்தில் நடைபெறும்.

பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் திரு என் விஜய சுந்தரம் ''வள்ளுவன் நெறியில் வாழ்வு'' எனும் பொருள் பற்றி கருத்துரை வழங்குவார். (--7)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் குண்டலகேசி நாடகம் இன்று மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (உ-7)

★ ★ ★

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டப விடிவெள்ளி அரங்கில் இன்று பிறபகல் 1 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. சி வைகுந்தசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கமும், கௌரவ விருந்தினராக தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ இளங்குமரனும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி வேலாயுதமும் கலந்துகொளவர்

(உ-30-111-7)


# கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி
திருநெல்வேலி

A/L 92

Aug. பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

DAY CLASS

பொருளியல் — வரதராஜன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — வரதன்
அளவையியல் — S. S. மனோகரன்
தமிழ் — கணேஸ்
இந்து நாகரீகம் — சிவ மகாலிங்கம்.
புவியியல் — சண்

ஆரம்பம்:
04-02-1993
காலை 9-0 மணி

★ வாரத்தில் நான்கு நாட்கள் நடைபெறும். (சி-4201)



# யாழ். வர்த்தகர் சங்கம்
## பொது அறிவித்தல்

சென்ற மாதம் 22ஆம் திகதி யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற யாழ் வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

1. தலைவர்: திரு. வே. சிற்சபேசன் — செல்லப்பா களஞ்சியம்
2. செயலாளர்: திரு நா. த அன்னலிங்கம் — மற்றா தளபாட நிலையம்
3. பொருளாளர்: திரு பொ. சந்திரலிங்கம் — மதி ஆபரண மாளிகை

அத்துடன் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யபபட்டனர்.

யாழ். வர்த்தகர் சங்கம்
21, மேல்மாடி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி / 4211)



# நியூட்டன் அக்கடமி

(கோண்டாவில்)

ஆண்டு 4 தொடக்கம் 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

அனுமதிக்கு முந்துங்கள் !!

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு. S. கருணாகரன் |
| விஞ்ஞானம் | : | திரு: இரா. அருட்செல்வம் |
| தமிழ் | : | பிரபல ஆசிரியர் |
| சமூகக்கல்வி | : | திரு. கணேஷ் |
| ஆங்கிலம் | : | திரு. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | : | திரு. ஸ்ரீ |

★ கிழமையில் 6 கணித வகுப்புகள்
★ மாதாந்த பரீட்சைகள்
★ உயர்ந்த எதிர்காலத்திற்கு உங்கள் சிறார்களை எம்மிடம் ஒப்படையுங்கள்

## O/L Day Class
## ஆரம்பம் : 4-2-93
காலை 8 மணி.

(கிழமையில் 4 நாட்கள் வகுப்புகள் நடைபெறும்)

(சி-4205)



பிரியமான எம் குடும்பத் தலைவனின்

# 45ஆம் நாள் நினைவாக

தோற்றம்:
13-10-1924



மறைவு:
21-12-199.

## அமரர் மாணிக்கம் மயில்வாகனம்

[ஓய்வுபெற்ற
மதுவரி தலைமை உத்தியோகத்தர் (சார்ஜன்ட்)]

மெய்யன்பின் திருவுருவே! மேலாம் பண்பு
மேவியொளிர் சிகரமே! எங்கள் குடும்பம்
வையமதில் ஒளிபெறவே மணிவிளக்காய்
வாழ்ந்திருந்த பெருஞ்சுடரே! எம்மை நீத்து
தெய்வத்தின் திருவடிகள் சேர்ந்திட்டாலும்
தினம் உங்கள் நினைவுகளால் தேம்புகின்றோம்!
ஐய, நின் ஆத்மாநற் சாந்தி அடைய
அனுதினமும் பிரார்த்தித்து அஞ்சலிப்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

''வீரப்பதிரையன்''
சரணவாய் தெற்கு,
கரவெட்டி

(24284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த

# காட்டுப்புலம் பகுதி மக்களுக்கு தென்மராட்சியில் குடியிருப்பு

சுழிபுரம், பெப். 3

வலி. வடக்கில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தங்கியிருந்த காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த வாரத்தில் இரண்டு தொகுதிகளாக சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் லொறிகள் மூலம் இவர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருப்பதால், இங்கு மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

காட்டுப்புலம் பகுதி அடிக்கடி ராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி வருவதால் இம்மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று வசிக்க முடியாமல் உள்ளது.

இந்திய வம்சாவளி தொழிலாளருக்கு

## எழுச்சிக் கிராமத்தில் இடம் வழங்க அரசு உறுதி

கொழும்பு, பெப். 3

திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணியாற்றும் சுமார் 650 நகரசுத்தி இந்திய வம்சாவளித் தொழிலாளர் குடும்பங்களுக்குத் தலா 10 பேர் வீதம் காணிகளை வழங்கி, அவர்களை சகல வசதிகளையும் கொண்ட எழுச்சிக் கிராமத்தில் வாழ வசதி செய்வதாக அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி விடுத்த வேண்டுகோளின் மீது அமைச்சர் சிறிசேன கூரே இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறார். திருமலையில் நடந்த ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது திரு. செல்லச்சாமி, அமைச்சர் சிறிசேன கூரேயை நேரில் சந்தித்து தமது கோரிக்கையைச் சமர்ப்பித்தார்.


உ

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் தை மாதம் 23ஆம் நாள் (05 - 02 - 93) வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரமும், திரயோதசித் திதியும், சித்த யோகமும் கூடிய வேளையில் காலை 8 மணி 55 நிமிடம் முதல் 9 மணி 40 நிமிடம் வரையுள்ள மீன லக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது ஜ்யேஷ்ட புத்திரன்

### சிரஞ்சீவி பாலரூபனுக்கு

யக்ஞோபவீத பிரம்மோபதேசம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகை தந்து, செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்:
தி. குமாரசதாசிவ சர்மா,
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
கமலாதேவி.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(24716)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகர சனசமூக நிலையங்களுக்கான

### அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையில் பதிவு செய்யப்பட்ட 67 சனசமூக நிலையங்களில் இதுவரை 31 சனசமூக நிலையங்களே நடப்பாண்டுக்கான நிர்வாக சபையினைத் தெரிவுசெய்து எமக்கு அறிவித்துள்ளன.

மீதியான 36 சனசமூக நிலையங்களும் உடனடியாக நடப்பாண்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து, அத்தெரிவு பற்றிய விவரங்களை எதிர்வரும் 15-02 93 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அறியத் தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01-02-1993.

(சி/4339)


## ஆய்வு வேலைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ் மாவட்டத்தின் போஷாக்கு நிலையை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யும் வேலைகள் பருத்தித்துறையில் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்கள், குடும்பநல சேவையாளர்கள், மருத்துவபீட மாணவர்கள் அங்கம் பெறும் ஏழு குழுக்கள் இந்த ஆய்வில் ஈடுபடவிருக்கின்றன.

(உ-3)

## யாழ். பல்கலை விஞ்ஞான பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், பெப் 3

யாழ். பல்கலைக் கழகம் நடத்திய முதல் விஞ்ஞானப் (உயிரியல்) பரீட்சையில் (1991) 68 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்

இப்பரீட்சையில் செல்வி எஸ். சிவலிங்கம் உயிரியலில் மிகச் சிறந்த சாதனைக்காக சபாலிங்கம் நினைவுப் பரிசைப் பெற்றுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம் நடத்திய முதல் விஞ்ஞானப் (பௌதிகவியல்) பரீட்சையில் (1991) 80 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சையில் செல்வி விவேகா விவேகானந்தன் பௌதீகவியலில் மிகச் சிறந்த சாதனைக்காக சபாலிங்கம் நினைவுப் பரிசையும், செல்வி எஸ். சிவலிங்கம் இரசாயனவியலில் மிகச் சிறந்த சாதனைக்காக வரதராசா நினைவுப் பரிசையும் பெற்றுள்ளார்கள்.

(க)

## குறைவான நெல் விளைச்சல்

வட்டுக்கோட்டை, பெப். 3

வலிகாமம் மேற்கு வயல்களில் காலபோக நெல் விளைச்சல் மிகவும் குறைவானதாக உள்ளது.

பல வயல்களில் நெல் அறுவடைக்குப் பதில் ஒட்டுகளை வெட்டி எடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த வயல்களிலிருந்து விதை நெல் கூடக் கிடைக்குமா என்பது சந்தேகமே என்று தெரிவிக்கப்படுகிறது.

(க 161)

## சுகாதார ஆண்டு

யாழ்ப்பாணம், பெப். 3

1993ஆம் ஆண்டை யாழ். மாவட்டத்தில் சுகாதாரத்திற்கான ஆண்டாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிரகடனம் செய்துள்ளது

யாழ் மாவட்டத்தில் அதிகரித்து வரும் சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனுமே இவ்வாறு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

(ஒ)

தமிழருக்கு எதிரான போருக்கு

# இரு வருடங்களில் மட்டும் 24 ஹெலி, விமானங்கள்

### ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப். 3

தமிழருக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளுக்காக ஸ்ரீலங்கா அரசு கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 24 விமானங்கள், ஹெலிகளுக்கு மேல் கொள்வனவு செய்துள்ளது.

இவை தவிர பல கனரக வாகனங்கள், டாங்கிகள், சிறிய ரக டாங்கிகள், பீரங்கி பொருத்தப்பட்ட வாகனங்கள், பொருள்களை ஏற்றி இறக்கும் வாகனங்கள், துப்பாக்கி பொருத்தப்பட்ட நீருந்து விசைப்படகுகள், அதிவேக சமரில் ஈடுபடுத்தப்படும் படகுகள் ஆகியனவும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கைவசம் இருக்கும் படைக்கலங்கள் இன்னும் இரண்டு வருடங்களுக்கு பாரிய — போர் நடவடிக்கைகளுக்கு — பயன்படுத்தப் போதுமானவை என்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

(ஒ-3)

## வெளி மாவட்டங்களுக்கும் ஆசிரியர் இடமாற்றம்

குடாநாட்டில் இருந்தும் ஆசிரியர்கள் சிலர் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர். அவர்களில் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு 7 பேர் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

அந்த ஏழுபேரின் பெயர்கள் மற்றும் அவர்கள் இதுவரை பணிபுரிந்த பாடசாலை விவரம் வருமாறு:

o கிளிநொச்சிக்கு – ஈ. அ நடராச ஏகாம்பரம் வித்தி ), திருமதி முத்தம்மா சண்முகலிங்கம் (புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தி.), செ. இராகுப்பிள்ளை (பேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தி ).

o வவுனியாவுக்கு — திருமதி ஆர் ஜெ. எஸ் தர்மகுலசிங்கம் (வண்ணை நாவலர் ம வி )

o திருகோணமலைக்கு — திருமதி பா. சிவலோகநாதன் (புலோலி மெ. மி. த. க.பா ), திருமதி மீ. செந்தில்நாதன் (சாவகச்சேரி இ க. )

o முல்லைத்தீவுக்கு — திருமதி சிவாஜினி சிற்சபேசன் (இமையாணன் அ. த. க. வித்தி.)

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள 73 ஆசிரியர்களின் விவரம் 7-01-93 ஆந்திகதிய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

(ஒ-7-162)


## புதிய பயிற்சி நெறிகள்

* RADIO T. V. & DECK
* COMPUTER "BASIC"

**ஆரம்பம்: 06 - 02 - 1993**

- வார, வார இறுதி நாட்கள் வகுப்புக்கள்.
- இலகு விரிவுரைகள்.
- சிறந்த செய்முறைப் பயிற்சிகள்.

விவரங்களுக்கு:

NORTH CEYLON TACHNICAL INSTITUTE
4 St. PETER'S LANE, JAFFNA.

(சி/4203)



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்ப நாள் வெளிப்படுத்தல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பநாளை உறுதிசெய்வதற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நியமிக்கப்பெற்ற குழுவின் அறிக்கை, கல்லூரி சார்ந்த அனைத்துச் சபைகளினதும், மன்றங்களினதும் செயற்குழு சங்கத்தினர் முன்னிலையில் 31 01 - 1993 ஞாயிற்றுக்கிழமை என்னால் சமர்ப்பிக்கப்பெற்றது. அறிக்கையைப் பரிசீலனை செய்த சபையினர், கல்லூரி முதன் முதலில் ஆரம்பிக்கப்பெற்ற தினம் 01 - 08 - 1816 என்பதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.

இத்துடன் சபையின் முன்னர் சமர்ப்பிக்கப்பெற்ற கல்லூரிக் கீதத்தின் ஆங்கில மூலத்தின் புதிய தமிழ் ஆக்கமும் சபையினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

மேற்படி தீர்மானங்களைக் கல்லூரியோடு தொடர்புடைய சகலருக்கும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்

நா. க. சண்முகநாதபிள்ளை,
அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

02 - 92 - 1993.

(சி-4336)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த ஜப்பனீஸ்,பன்ரம்,வெள்ளடி, கழுத்துவெட்டி, பன்ரம் கோழி முட்டைகளும், முட்டை இடும் பன்ரம் பேடுகளும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: கதிர் - தேனீர்க் கடை, துறைமுகச் சந்தி, கொழும்புத்துறை. (24260)

National RX-F2ஸ்டீரியோ கசட் றேடியோ, விற்பனைக்கு. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம். (24265)

### மலிவு விற்பனை

திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணி நேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக்கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (24711)

### தேவை

பட்டுப்புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள, மாநகர எல்லைக்குள் வசிக்கும், 25—35 வயதுக்குட்பட்ட ஆண் வேலையாளர் தேவை. ஆர்வமுடையோர் 10-02-93க்கு முன்னர் சோபனா ஆடை அகம், 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும். (5770)

காசாளர் பதவிக்கு வேலையாள் தேவை. க.பொ.த, (உ/த) பயின்ற, மாநகர எல்லைக்குள் வசிக்கும், புடைவை வியாபார அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. தேவையான சான்றுகளுடன் 10-02-93க்கு முன்னர் சோபனா ஆடை அகம், 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும். (5769)

### இனாம்

எம்மிடம் மணிக்கூடு, றேடியோ திருத்தும், கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ், இல. 284, ஸ்ரான்லி வீதி, வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இல 3, கண்டி வீதி, சாவகச்சேரி. (இலங்கை வங்கிக்கு அருகில்). [5771]

### தவறிவிட்டது

கடந்த 03-01-93 அன்று வல்லைச் சந்திக்கும் - புறாப்பொறுக்கிச் சந்திக்குமிடையில் பரீட்சைப் பெறுபேற்று ஆவணங்களும், வேறு பல முக்கிய ஆவணங்களும், உடுப்புக்களும் தவறிவிட்டன. எடுத்தவர்கள் ஆவணங்களை யாவது கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன் சந்திரசேகரம் யோகாம்பிகை, குருநாதர் கோவிலடி, பொலிகண்டி. (5776)

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளுககும், தடைகள், சஷ்டங்களுக்கும் நிவாரணம் பெற சாதகத்துடன் நேரில் வரவும் அதிர்ஷ்டம் அழைக்கிறது. பலன் தவறினால் பணம் திருப்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மானை விநாயகர் சாதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர்.
G (24278)

### மணமகள் தேவை

8 இல் செவ்வாய், பாவம் 10, வயது 31, சவூதியில் வேலை பார்ப்பவருக்கு பெண் தேவை. பெண் 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்பு: இல. 880, மே/பா உதயன். (5774)

### இலவச திருமண சேவை

25 வயது, அச்சுவினி, நோர்வேயில் படித்து தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை இலங்கையில் விவாகம் செய்து அழைக்கலாம். மணமக்கள் தேவைக்கு ஞாயிறு காலையில். விமலா யாழ். நாச்சிமார் கோவிலடி (24270)

32 வயது, மூலம், சுவிஸ் வீசாவுடன் தொழில் புரிபவருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. விவாசம் இந்தியா / சிங்கப்பூரில் செய்து அழைக்கலாம் து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (24271)

30, வயது பூசம் செவ்வாய் 4, சட்டத்தரணியாக கொழும்பில் கடமைபுரிபவருக்கு ஏற்ற மணமகன் தேவை. வெளிநாடும் விண்ணப்பிக்கலாம். மணமக்கள் உண்டு தொடர்பு; ஞாயிறு காலையில். விமலா நாச்சிமார் கோவிலடி (24272)

### பயிற்சி

O/L சித்தியடைந்த மாணவிகளுக்கு பாலர் ஆசிரியை பயிற்சி வகுப்பு தைப்பூசத் தினமான 6ஆம் திகதி சனிக்கிழமை 2 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது. நேரில் வரவும். பாலர் கல்விக் கழகம், 49/5, யாழ். றோட், யாழ்ப்பாணம். (24269)

### TUITION

Individual Tuition in English Literature to G C.E O/L Offered by Experienced teacher Homes Visited. Contact Box: 492, C/o Uthayan. (24266)

### இசை வகுப்புகள்

யாழ்மோசையின் வீணை, வயலின், வாய்ப்பாட்டு ஆகிடன எதிர்வரும் தைப்பூசத் தினத்தில் (06 02-1993) சனி காலை 9 00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன தொடர்பு: இல. 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (24254)

### "நிமியா உரம்"

விவசாயிகளின் உற்ற நண்பன். விளைச்சலைப் பெருக்கும் பசளைக்கு கேடு விளைவிக்கும், பூச்சி, புழுக்களை விரட்டும் நாசனி. 20 கிலோ பொதிகளிலும் கிடைக்கிறது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. மில்க்வைற். (சி-4331)

### கண்டனம்

பளை மகா வித்தியாலயத்திலிருந்து எட்டு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு இப்பகுதி மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர்கள் இடமாற்றலாகிச் செல்வதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையலாமெனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (த-117)

---

**A/L 92-ல்**
பரீட்சை எடுத்த
மாணவர்களுக்கான
**வினா-விடை**
வகுப்புகள்
**அளவையியல்**
**சோதிலிங்கம்**
ஆரம்பம்:
06-02-1993
காலை 6 — 7
மாலை 5 — 6
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-4399)

---

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப
## திறப்பு விழாவும்
"ராக பாவம்"
## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்;- 06 - 02 - 1993 — 08 - 02 - 1993
நுழைவுச் சீட்டு:-
நாள் ஒன்றுக்கு: 500/-, 250/-
(சி-3920)
பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

---

## G. A. Q. - 94
### பேராதனைப் பல்கலைக்கழகம்
(வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்)

★ மேற்கூறப்பட்ட பட்டப் படிப்பிற்கான விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்

★ கலை - வர்த்தக - விஞ்ஞான பாடநெறிகளில் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ முக்கிய குறிப்பு:
A/L 92 August பரீட்சை எடுத்து 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் ஆரம்பம்: 06 - 02 - 1993
காலை 9-00 மணி

விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-4400)

---

## 45ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில்: 29 — 04 — 1962
ஆண்டவன் அடியில்: 21 — 12 — 1992

திருமதி
### வசந்தமலர் கந்தசாமி
(முன்னாள் சோமாஸ்கந்தா மகளிர் சங்கத் தலைவி)

இவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மட்டுவில் மத்தி சோமாஸ்கந்தா —
- மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
- கிராம அபிவிருத்திச் சங்கம்,
- சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்,
- சனசமூக நிலையம்.

1993-02-03. (5775)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 31 — 07 — 1972
ஆண்டவன் அணைப்பில்: 30 — 01 — 1992

### செல்வி கந்தசாமி மாலதி
(நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை)

எங்கள் அன்புச் செல்வமே மாலதி
ஆறாத்துயரிலெம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு எங்கே சென்றாயம்மா!

உமது பிரிவால் நிதம் வாடும்:
அன்பு அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார், அப்பம்மா.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (24261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முயன்று பார்க்கட்டும்

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை நடத்த உதவுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக—

அமெரிக்காவின் பிரபல சட்டத்தரணியும் சட்டத்துறைப் பேராசிரியருமான டாக்டர் காலித் அல் மன்சூர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் காலித் ஒரு தனிமனிதனாக, தனிப்பட்ட ரீதியில் இருதரப்பினருக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பித்து வைக்க முன்வந்திருக்கிறாரா அல்லது ஓர் அமைப்பின் பிரதிநிதியாக இவ்விடயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறாரா என்பது குறித்தும் எதுவும் தெரியவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர் என்ன உள் நோக்கோடு இந்தப் பணியில் இறங்கவுள்ளார் என்பது குறித்தும் தகவல் இல்லை.

ஆகையால் அவரது விருப்பம் அல்லது முயற்சி குறித்துப் பெரிதாக எதிபார்க்க எதுவுமில்லை. ஆஸ்திரேலிய அரசு முதல், குவாக்கர்ஸ் குழு வரை, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் பேச வைப்பதற்குத் தெரிவித்த விருப்பம் மற்றும் மேற்கொண்ட முயற்சிகள் போலவே டாக்டர் காலித் மன்சூரின் விருப்பமும் மாறிப் போ[illegible].

ஆனால்... தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தங்கள் உரிமைகள் கிடைக்க வேண்டும், அரசியல் அபிலாசைகள் நிறைவேற வேண்டும் என்பதே அவர்களின் பிரதானவிருப்பம்.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பது அவர்களின் ஆவலாக உள்ளது. ஆனால் மறுதரப்பான அரசுக்கு அதில் சிறிதளவேனும் அக்கறை இல்லை. பிரச்சினையை சரியாகப் புரிந்து கொண்டு அதற்குரிய யதார்த்தமான தீர்வைத் தேடுவதில் அதற்கு நாட்டமில்லை.

பிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வைக் காண்பதில் நாட்டமில்லாமல் வெறும் பேச்சுவார்த்தையால் பயன் கிடைக்காது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மனோ பாவம் சிறிதுமின்றி கொள்கை வழிமுறை எதுவும் இல்லாமல் பேச்சுக்களை நடத்திப் பயன் ஏது? கடந்த 44 வருடங்களாகத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் தோல்வியுற்ற[illegible]மைக்கு இவையே காரணம்.

டாக்டர் காலித் மன்சூர் நினைப்பது போல இலங்கையின் இனப்பிரச்சினை இலகுவில் தீர்க்கப்படக் கூடிய ஒன்றல்ல மிகவும் கஷ்டமான பணி. அரசாங்கத்தின் மனோபாவமும், அணுகுமுறைகளுமே இப்பிரச்சினையைக் கடினமாக்கி உள்ளன.

தமிழர்களைப் பொறுத்த வரையில், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் யுத்தத்தை நிறுத்தவும்! பேச்சுவார்த்தை நடத்தவும் அவர்கள் தயார். அரசாங்கம் அவற்றுக்குத் தயாரா? யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான முற்சூழலை உருவாக்க அது தயாரா?

டாக்டர் காலித் மன்சூராக இருந்தால் என்ன? வேறு யாராக இருந்தால் என்ன, அரசின் நடவடிக்கைகளைப் பார்த்து அதன் போக்கைப் புரிந்து கொண்டு தமது முயற்சியில் இறங்க வேண்டும்.

பேச்சு நடத்துவதற்கும், யுத்தத்தை நிறுத்துவதற்கும அரசாங்கத்தை உடன்படச் செய்யக் கூடிய வல்லமையும், திறமையும் உள்ளவர்களே இது விடயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். டாக்டர் காலித் மன்சூர் என்ன செய்யப் போகிறார்? அரசின் மனோபாவத்தை அவரால் மாற்ற இயலுமா? செய்து (முயன்று) பார்க்கட்டும்!

---

யாழ். மாவட்டத்தில்

# உணவு, வைத்திய வசதியின்றி
# தினமும் 15 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப் 3

யாழ். மாவட்டத்தில் உணவு மற்றும் வைத்திய வசதிகள் இன்றி தினமும் 15 பேர்வரை உயிரிழப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது.

அறவழி செய்திக் கதிர் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தொடரும் யுத்தத்தினால் சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் உட்படப் பலர் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குழந்தைகள் பிறக்கும்போதே போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுப் பிறக்கின்றன. சிறுவர்களின் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

மேலும் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களால் 2[illegible]0க்கும் மேற்பட்ட 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். 400க்கும் மேற்பட்ட சிசுக்கள் பிறந்தவுடன் இறந்துள்ளன. மேலும் வடபகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் அகதி முகாம்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால் அங்கு சுகாதார சீர்கேடுகளும் அதிகரித்துள்ளதுடன் தொற்று நோய்களும் பரவத் தொடங்கியுள்ளன

இவ்வாறு அதில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (த)

## வடமராட்சிப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல்!

### கடந்த மாதம் பலர் பாதிப்பு

மந்திகை, பெப். 3

வடமராட்சிப் பகுதியில் கடந்த ஜனவரி மாதத்தில் ''தைபொயிட்'' காய்ச்சல் எனப்படும் நெருப்புக் காய்ச்சல் மிகவும் அதிகமாகப் பரவி இருந்தது.

இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட அநேகமானோர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை, வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலை போன்றவற்றில் சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளிவிவர அறிக்கைகளில் இருந்து தெரிய வருகிறது.

வடமராட்சியில் மலேரியா நோயினாலும் கணிசமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது. (ஓ-87)

## கப்பல் சென்றதால் மக்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், பெப் 3

கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தமது கடிதங்களை அனுப்புவதற்கு 'குமாரி' கப்பலை நம்பியிருந்த மக்கள் பலரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

திட்டமிட்டவாறு குமாரி' இன்று புறப்படும் என நினைத்துத் தமது கடிதங்களை கப்பலில் சேர்ப்பதற்காகப் பலரும் நேற்றுப் பிரதம தபாலகத்திற்கு வந்திருந்தனர்.

கப்பல் நேற்று முன்தினமே சென்றுவிட்டது என்ற செய்தி கேட்டு அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (அ-17

## மாவீரர் நினைவாலயம்

நவாலி, பெப் 3

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயம் அருகில் மாவீரர் நினைவாலயம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது (ஓ 00)

## பரிசூதியப் பத்திரங்கள் வானிலிருந்து வீசப்படும்!

### தெற்கில் மக்கள் வங்கி ஏற்பாடு

கொழும்பு, பெப். 3

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினமான நாளை, ஆகாயத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பரிசூதிய சேமிப்புப் பத்திரங்களை கீழே போடுவதற்கு மக்கள் வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நாளை காலை 10மணி முதல் நண்பகல் 12மணிவரை இப்பத்திரங்கள் போடப்படும் என்றும் —

கண்டி, குருநாகல், மாத்தறை, பதுளை, அனுராதபுரம், இரத்தினபுரி இய பகுதிகளில் பரிசூதியப் பத்திரங்களுடன் 300 பலூன்கள் பறக்கவிடப்படும் என்றும் —

பரிசூதியப் பத்திரத்தைப் பொறுக்கி எடுத்தவர்கள் பக்கத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளையிடம் கொடுத்து 200 ரூபாவுக்கான சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்கலாம் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ எ)

ஆளுநருக்கு எதிராக

## தி.மு.க தாக்கல் செய்த மனு விசேட நீதிமன்றின் முன்!

சென்னை, பெப். 3

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் மற்றும் அவரது சக அமைச்சர்கள் சிலர் மீதும் வழக்குத் தொடருவதற்கு மாநில ஆளுநர் அனுமதி அளிக்க மறுத்து விட்டதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கல் செய்த ரிட் மனு ஒன்றை அந்க நீதியரசர்கள் கொண்ட — விசேட நீதிமன்றுக்கு முன்னால் விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் இந்த மனுவை விசேட நீதிமன்றுக்குப் பாரப்படுத்தும் உத்தரவை நீதியரசர் ஏ. பக்தவத்சலம் பிறப்பித்தார்

லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சரையும் வேறு அமைச்சர்கள் சிலரையும் விசாரிப்பதற்கு தி. மு க பொதுச் செயலாளர் க. அன்பழகன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். (உ-எ)

## ஆளுநரைப் பதவி விலக தி.மு.கவினர் வலியுறுத்து

சென்னை, பெப். 3

தமிழக ஆளுநர் பிஷ்ம நாராயணசிங் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று தி மு க கோரியுள்ளது

ஆளுநர் பதவி விலகத்தவறினால் அவரை மத்திய அரசு பதவி நீக்கஞ் செய்யவேண்டும் என்றும் தி. மு க. கோரிக்கை விடுத்துள்ளது

தி. மு. கவின் பொதுக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணை அடிப்படையில் ஆளுநர் பதவி விலக வேண்டும் என்றும் தி. மு. க. வலியுறுத்தியுள்ளது. (உ-எ]

திருமலை மாவட்டத்தில்

## ஆலயங்களைப் புனரமைக்க இந்து அபிவிருத்தி நிதியம்

கொழும்பு, பெப், 3

திருகோணமலை மாவட்டத்தில் கடந்தகால வன்செயல்களின்போது சேதமாக்கப்பட்ட 120க்கு அதிகமான இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கு திருமலை மாவட்ட இந்து அபிவிருத்தி நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியைச் சேகரிக்க திருமலை இந்து ஆலய அறங்காவலர்கள், இந்து மன்றங்களின் தலைவர்கள் கூடி, ஒரு செயற்குழுவை நியமித்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் உள்ள இந்து கொடை வள்ளல்களிடம் இருந்தும் வர்த்தகர்களிடம் இருந்தும் இதற்கான நிதியை இந்த செயற்குழு திரட்டும்.

ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜின் ஆலோசனையின் பேரில் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## சிங்கள மீனவர்கள் மூவரை புலிகள் கடத்தினரா?

கொழும்பு, பெப். 3

பதவியாவில் மீன்பிடிக்கச் சென்ற மூன்றுபேரை, காட்டுப் பகுதிக்குள் இருந்து வெளியே வந்த விடுதலைப் புலிகள் ஆயுத முனையில் கடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு நேற்றைய கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இப்பகுதியில் உள்ள பாதுகாப்பு நிலைவரங்களை அறிவதற்காகவே விடுதலைப் புலிகளினால் இம்மூவரும் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஒ-எ)

# வருமான வரிச் சட்டத்தில் மாற்றம்; புதிய வரி விகிதங்கள் அறிவிப்பு

### திங்கள் முதல் நடைமுறையில்

கொழும்பு, பெப். 3

வருமானவரிச் சட்டத்தில் புதிய வரிவிகிதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன

தற்போது காணப்படும் குறைபாடுகள், சீர்கேடுகள் ஆகியவற்றை நிவர்த்திக்கும் நோக்கத்துடன் தேவையான திருத்தங்கள் இந்த விகிதங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ள இந்த விகிதத்தில், 1986ஆம் ஆண்டிற்குப் பின்னர் வருமான வரிச் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட சகல திருத்தங்களும் உள்ளடக்கியுள்ளது இவ்வரி விகிதத்தில் மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் சபைகள் விடுத்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பின்னர் அரசு இப்புதிய விகிதங்களை அறிவித்துள்ளது.

இதன்படி—

கைத்தறி புடைவைகள் தவிர்ந்த ஏனைய புடைவைகளுக்கு பத்துசதவீத வரி விதிக்கப்படும் 'ரெடிமேட்' புடைவைகளுக்கு விதிக்கப்பட்டு வந்த வரி தொடர்ந்தும் 27 சதவீதமாகவே இருக்கும் பனியன்களுக்கான வரி 10 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது கைத்தறி புடைவைகளுக்குத் தேவைப்படும் நூலைத் தவிர, ஏனைய ரக நூல்களுக்கு 20 சத வீத வரி விதிக்கப்படவுள்ளது

மார்ஜரின் வரி வீதம் 20 சத வீதத்தில் இருந்து 10சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது சில்லறைக்கு விற்கப்படும் பிஸ்கட்டுகளுக்கு 5 சத வீத வரி விதிக்கப்படும் அதேவேளை, பக்கட்டுகளிலும், தகரங்களிலும் அடைக்கப்பட்ட பிஸ்கட்களுக்கு 20 சத வீதம் வரி உண்டு.

ஜாம், பழரசம், பழச்சாறு ஆகிய உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு 10 சத வீத வரி விதிக்கப்படும் நூடில்ஸ்களுக்கான வரி 10 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது சோயா இறைச்சிக்கு சலுகை அடிப்படையில் 5 சத வீத வரி விதிக்கப்படும்.

பால்மா, குழந்தைகளுக்கான பால்மா ஆகியவற்றைப் பொதியில் அடைப்பதற்காக பயன்படுத்தப்படும் காகிதத் தாளுக்கு வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மருந்துப் பொருள் கலந்த பானங்களுக்கான வரி 20 சத வீதத்தில் இருந்து 10 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மண்எண்ணெய் விளக்குகள், அவற்றுக்குத் தேவையான பொருள்களுக்கான வரியும் 10 சத வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## ராணுவ முகாம்களில் தேசியக் கொடி விற்பனை!

கொழும்பு ஜன. 3

மட்டக்களப்பில் உள்ள இராணுவ மற்றும் பொலீஸ் சோதனை நிலையங்களில் வைத்து ஸ்ரீலங்காவின் தேசியக் கொடிகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றனவாம்.

நாளை வியாழக்கிழமை ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம் என்பது குறிப்பிடத்தக்கது

## புலிகள் கைபபற்றிய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- தொலைத் தொடர்பு சாதனம் — 01
- அதற்குரிய மின்கலம் 01
- தொலைநோக்கிச் சாதனம் — 01
- ஹேரல்ஸர்கள் — 04
- தண்ணீர் தாங்கிகள் — 04
- இராணுவ சப்பாத்து — 2சோடி
- இராணுவ பைகள் — 02

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா துரைராசா

[பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை 17 இன் முன்னாள் முகாமையாளர்]

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா துரைராசா அவர்கள் நேற்று நண்பகல் 12 மணி அளவில் காலமாகி விட்டார். அன்னார் செல்லப்பா தம்பதிகளின் அருமை மைந்தரும் பூபதிஅம்மாவின் அன்புக் கணவரும், கோகுலராணி, ஜெயரஞ்சிதராணி ஸ்ரீ பாஸ்கரன் (பிரான்ஸ்), சுமதிராணி, கலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), காசிலிங்கம், ஸ்ரீகந்தவேல் ஆகியோரின் மாமனாரும், இரத்தினம், நடராசா, காலஞ்சென்ற குணரத்தினம், தியாகராஜா, மங்கையர்க்கரசி, இராசமணி, மகேஸ்வரி, நமசிவாயம் (கிளிநொச்சி), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், [illegible] சாமி, பா[illegible]வதி, சேதுபதி இர[illegible]ப் பிள்ளை விநாயகமூர்த்தி, முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற சேனாதிராசா, அப்புத்துரை (Housing Diet), நாகராஜா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் இன்று 03-02-1993 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் மல்லாகத்திலுள்ள வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி துரைராசா

நீலியம்பனை,
மல்லாகம்.
(24285)

## சின்னத்தம்பி திருநாவுக்கரசு

(மலாயன் பென்சனர்: பிரதம கணக்குப் பதிவாளர், கோலாலம்பூர்)

சங்கானை கிழக்கு தொட்டிலடியைச் சேர்ந்த மலாயன் பென்சனர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (1993-02-02) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தசமித் திதியில் சிவபதம் அடைந்தார்.

அமரர் அவர்கள் காலஞ்சென்ற திருமதி தையல்நாயகம் அவர்களின் பேரன்புக் கணவரும், திரு. சிவதட்சணாமூர்த்தி (மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, கிளிநொச்சி, மன்னார்) அவர்களின் பாசமிகு தந்தையும், திருமதி ஆனந்தவல்லி சிவதட்சணாமூர்த்தி (இலிகிதர், பிரதேச செயலகம், சங்கானை) அவர்களின் பிரியமிகு மாமனாரும், செல்விகள்:- ஹரப்பிரியா, ரேணுகாதேவி, சிறிலதா, செல்வன் கபிலன் (மாணவர்கள் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் நேசமிகு பேரனும், அமரர் சி சோமசுந்தரம் (அப்போதிக்கரி - மலேசியா), திரு. சி. குமாரசுவாமி (ஓய்வுபெற்ற நில அளவையாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும், திரு. திருமதி கணேசநாதன், கணேஸ்வரி, திரு. திருமதி குலசிங்கராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. திருமதி சுப்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியர், மூளாய்) தம்பதியினரின் அன்புச் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் அபரக்கிரியைகள் இன்று (1993-02-03) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிவாக்கினியுடன் சங்கமிப்பதற்காக விளாவெளி சைவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இச்செய்தியை ஏற்றுக்கொள்ளும்வண்ணம் தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
சிவதட்சணாமூர்த்தி
(மகன்)

சிவந்தனாவத்தை
தொட்டிலடி,
சங்கானை கிழக்கு.
[24283]

## நாகலிங்கம் திருவிளங்கம்

(இளைப்பாறிய டாக்டர்)

கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு. நா. திருவிளங்கம் (இளைப்பாறிய டாக்டர்) கொழும்பில் 31-1-93 அன்று காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை நாகலிங்கம் வேதநாயகம் சிவகுருநாதர் தம்பதிகளின் ஏகபுத்திரனும், சுந்தராம்பிகையின் அன்புக்கணவரும், வேதநாயகி (சீதா - ஆசிரியை, கண்டி), வள்ளிநாயகி (மீரா-U.K.), திருவல்லபன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவா, சச்சிதானந்தம் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷிக்கா, கஜன், ஜெகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - கனகாம்பிகை தம்பதிகளின் மூத்த மருமகனும், திருமதி காவேரியம்மா வாமதேவன், சிறீனிவாசன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), சிறீகிருஷ்ணராஜா (U.S.A.), சிறீஸ்கந்தராஜா (பொறியியலாளர், கொழும்பு), சிறீவிசாகராஜா (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), திருமதி மாதவாம்பிகை இந்திரசேனன் (U.K.), டாக்டர் சிறீஜெயராஜா (U.S.A.), திருமதி சாரதாம்பிகை குமாரசாமி (கனடா), திருமதி யசோதராம்பிகை நடராசா, சிறீகணேசராஜா (U.K.) திருமதி வடிவாம்பிகை நமசிவாயம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 40, Mary's Road, பம்பலப்பிட்டி, கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தி. திருவல்லபன்
(மகன்)

18, அன்னசத்திர ஒழுங்கை,
பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(242[illegible])

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். கரப்பந்தாட்ட சம்மேளனம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மட்டுவில் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். ஜோசப் கல்லூரி அணியும் —

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதுகின்றன (த-17)

## நாளை

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் இளையின் கலைக்கூற்று பயிற்சிகள் இணுவில் மத்திய கல்லூரியில் நாளையும் சனியன்றும் நடைபெற உள்ளன. (உ-152)

O O O

யாழ் குடாநாட்டில் கடமையாற்றும் உப அதிபர்களுக்கான கருத்தரங்குகள் நாளை முதல் 7 ஆம் திகதி வரையும் பின்னர், 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவப் பிரிவில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (த-152)

O O O

குரும்பசிட்டி சன்மார்க்க சபை, சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் அநுசரணையுடன் வதிவிட வேளாண்மை பட்டறை ஒன்றை நாளை முதல் சனிக்கிழமை வரை மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடாத்த உள்ளனர். (உ-152)

## ராஜீவ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கில் 26 பேருக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

வசாரணை நடைபெறும் சிறைக்கூட வளாகம் முழுவதும் தடை செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், அதனைப் பாதுகாக்கும் பொறுப்பும் சிறப்புப் புலனாய்வுத் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது (உ-த)

## ஜனவரி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழங்குவதற்கு தேவையான கட்டுநிதி கொழும்பில் இருந்து யாழ் திணைக்களங்களுக்கு இன்னும் வந்து சேராததாலும் —

சம்பள உயர்வு தொடர்பான சுற்றறிக்கையில் காணப்பட்ட சில முரண்பாடுகள் குறித்து விளக்கம் பெற வேண்டியிருப்பதாலும் சம்பள உயர்வு வழங்குவதை பெப்ரவரிக்கு தள்ளிப்போடுவது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் சம்பள உயர்வையும், அதற்குரிய நிலுவைப் பணத்தையும் வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(உ-3

## 'குமண'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து தகவல் கிடைத்திருந்தது.

ஆனால் திங்கட்கிழமை காலை கொழும்பில் இருந்து புறப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தால், நாளை காலையே அது பருத்தித்துறையை வந்தடையும் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

நாளை காலை கப்பல் வந்து சேர்ந்ததும், யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் கப்பலில் வைத்துப் பொருள்களை கையேற்பார் என்றும்—

உடனடியாக தபால் மற்றும் அவசியப் பொருள்கள் இறக்கப்படும் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

([illegible]-17)

# மரண அறிவித்தல்கள்

## ஜெகா செந்தில்நாதன்

(முன்னாள் அரசாங்க அதிபர் - மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு ஜெகரத்தினம், திருமதி ஜெகரத்தினம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரன் திரு. ஜெகா செந்தில்நாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் சந்தானலக்ஷ்மியின் அன்புக் கணவரும், திருமதி செந்தில்மதி, செந்தில் செல்வி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஸ்ரீபதியின் (அவுஸ்திரேலியா) அருமை மாமனாரும், திரு. திருமதி கனகரத்தினத்தின் அன்பு மருமகனும், திருமதி பவானி தம்பிப்பிள்ளை (பொட்ஸ்வானா), திருமதி பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி (கைதடி), Dr நல்லைநாதன் (கைதடி), சிற்சபாநாதன் (சவூதி அரேபியா), சந்தியநாதன் (தென் ஆபிரிக்கா), கதிர்காமநாதன் (கிராம சேவையாளர் அராலி கிழக்கு), கைலைநாதன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை (04 - 02 - 1993) கொழும்பில் நடைபெறும்.

Dr. நல்லைநாதன்.

30, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.
(242[illegible]6)

## திருமதி திரேசம்மா விக்ரர்

இல. 803, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி திரேசம்மா விக்ரர் 01 - 02 - 1993 அன்று காலமாகிவிட்டார்.

இவர் விக்ரர் ஞானப்பிரகாசத்தின் (Retired Rail-way - Head Guard) அன்பு மனைவியும், அலோசியஸ், பேட்டி, மொறீன் (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், கொலஸ்ரிக்கா, கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெறி, ஜீன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மைக்கல் ஜேம்ஸ் - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. ஞானப்பிரகாசம் (J. P.), காலஞ்சென்ற மேரி அக்னெஸ் ஆகியோரின் மருமகளும், திருமதி சிறில் லில்லி, அக்னெஸின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03 - 02 - 93) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஞா. விக்ரர் (கணவன்)

803, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[24264]

## சரவணமுத்து ஆறுமுகம்

மீசாலையைச் சேர்ந்த சரவணமுத்து ஆறுமுகம் காலமானார். அன்னார் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லையா, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும், கோபாலமூர்த்தி (ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), புத்திராணி ஆகியோரின் தகப்பனாரும், கதிர்காமசேகரர் (அதிபர், கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை), நித்தியலட்சுமி ஆகியோரின் மாமனாரும், றஜீவ், சசீலா, சகீதா, சசீலன், சசிமாறன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (02-02-93) மீசாலையில் நடைபெற்றன.

தகவல்:
ஆ. கோபாலமூர்த்தி.

7, அம்மன் வீதி,
மீசாலை.
(24263)

## சபாபதிப்பிள்ளை குமாரசாமி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சபாதிப்பிள்ளை குமாரசாமி 31- 01 - 1993 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் சவுந்தரத்தின் அன்பு மகனும், கு கமலாட்சியின் அன்புக் கணவரும், கமலகுமார் (சுவிஸ்), சந்திரக்குமார் (கனடா), அசோக்குமார் (கனடா), சிவக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழினியின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், செல்வரத்தினம், இராசரத்தினம், விசுவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வானைப்பிள்ளை, இராஜேஸ்வரி, மகாலட்சுமி ஆகியோரின் மச்சானும், இரத்தினத்தின் பெறாமகனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
மனைவி, பிள்ளைகள்

தகவல்:
சு. குகனேஸ்வரன்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[24286]

மேலும் மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org